10th September 1958]

சர்க்கார்தானே வக்கீல் வைத்து முதலாளிகளுக்கு எதிராக வாதாட வேண்டும்? சர்க்கார், டிரேட் யூனியனில் மட்டும் பேசிவிட்டு வழக்கு நடக்கும்போது பேசாமலிருந்தால், என்ன அர்த்தம்?

THE HON. SRI R. VENKATARAMAN : குறிப்பான இந்த விஷயத்தில் சர்க்கார் வக்கீல் வைக்க வேண்டியதில்லை என்று தொழில் கோர்டு எங்களுக்கு சிபாரிசு செய்ததால், சர்க்கார் இந்த வழக்கில் வக்கீல் வைக்க முன்வரவில்லை,

### *Handkerchiefs*

* 100-A *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the value of export of Madras handkerchiefs to South Africa in 1952–53 and 1957–58;

(*b*) the reasons for the fall in export, if any ; and

(*c*) the steps taken to build up a foreign market for Madras handkerchiefs?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Madras handkerchiefs are being exported to West Africa and not to South Africa, as stated in the question. The value of export during 1952–53 was about Rs. 226·46 lakhs (two hundred and twenty-six) and it was Rs. 128·72 (one hundred and twenty-eight) lakhs during 1957–58.

(*b*) The main reasons for the fall in export were : (*a*) competition from Japan, (*b*) competition from the Indian merchants in West Africa, (*c*) lack of shipping facilities and (*d*) lack of organisation.

(*c*) With a view to check exploitation by the importers and to acquaint the producers and exporters about the real market conditions prevailing in West Africa, the All-India Handloom Fabrics Marketing Society has proposed to open a sales emporium there. Recently, direct shipping facilities to West Africa have also been provided. These measures are expected to build up a steady market for Madras handkerchiefs in West Africa.

SRI V. S. MANICKASUNDARAM : Sir, are not most of the handkerchiefs exported handloom products? Is there no standardization of handloom products now and will the Government take steps to standardize them?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the demand in West Africa is for Madras handloom handkerchiefs. There is competition from other countries who imitate our handloom product through their mills. The Government of India are now contemplating the stamping of these goods with the mark of ' Handloom '.

[10th September 1958

**SRI A. P. C. VEERABAHU:** இப்பொழுது கைக்குட்டை ஏற்றுமதி குறைந்திருப்பதற்கு காரணம் விலைக் குறைவினாலா அல்லது கைக்குட்டையின் எண்ணிக்கை குறைவினாலா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** ஜப்பானிலிருந்து அதிகமான காம்பட்டிஷன் வருகிறது என்பதை முக்கியமாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**SRI A. MARIAPPAN:** விலைப் போட்டியைத் தவிர்க்க அதற்கு சப்ஸிடி கொடுக்க முயற்சி செய்யப்படுமா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** இப்பொழுது யோசனையில்லை.

**SRI A. V. P. ASAITHAMBI:** ஏற்றுமதிக்கு எந்தப் பொருளும் அனுமதிக்கப்படுகிறபோது ஒரு குறிப்பிட்ட அளவு தரப்படும் என்று முதலில் விளம்பரப்படுத்திவிட்டு வியாபாரிகள் அந்த அளவிற்கு ஏற்றுமதிக்கு அனுமதி கேட்கிறபோது சர்க்கார் அதை குறைத்துக் கொடுக்கிற காரணத்தினால், வெளி நாட்டிலே அவர்கள், முதலில் அரசாங்கம் எந்தளவு விளம்பரப்படுத்துகிறதோ அந்தளவு ஒப்பந்தம் பண்ணி அது கிடைக்காதபோது பின் சர்க்கார் கொடுக்கிறதையும் ஏற்காது விட்டு விடுகிறார்கள். இதனால்தான் ஏற்றுமதிக் குறைவு ஏற்படுகிறது என்று சர்க்காருக்குத் தெரியுமா? ஆகவே இனியாவது அரசாங்கம் விளம்பரப் படுத்துகிற அளவு கொடுக்க முயற்சி எடுக்குமா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** அங்கத்தினர் அவர்கள் சொல்கிற காரணம் சரியல்ல. மதராஸ் ஹாண்ட்கர்சீப்பைப் பொறுத்த வரையில் நாம் ஏற்றுமதியை தடை செய்யவில்லை; போதிய அளவு ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் அங்கு அவர்கள் வாங்குகிற அளவுதான் குறைந்துவிட்டது என்று புகார் இருக்கிறது.

**SRI K. S. G. HAJA SHERIFF:** Sir, are the Government aware that there is direct and enough shipping facility to West Africa; and, if so, what steps they will take to induce more quantities of goods to go there?

**THE HON. SRI R. VENKATARAMAN:** One of the reasons for the initial fall in export was the lack of direct shipping facilities. I am now aware that shipping facilities have improved. But the market in West Africa has not improved correspondingly.

**SRI V. K. KOTHANDARAMAN:** கைத்தறி லுங்கி தனிநபர்கள் கையில் இருக்கிறவைகளின் தரம் குறைவானதாக இருப்பதின் காரணமாக ஏற்றுமதி குறைந்துபோவதினால் ஏற்றுமதிப் பொறுப்பை சர்க்காரே எடுத்துக்கொள்ளுமா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன், அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது சரியல்ல என்று. நம் தரம் குறைவு என்று இதுவரையில் யாரும் புகார் செய்ததில்லை. அப்படி அங்கத்தினர் அவர்கள் புகார் சொல்வதனால் அது தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அபிப்பிராயத்தை அவர் திருத்திக் கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்றுமதிக் குறைவுக்குக் காரணம், வேறு நாடுகளில் இருந்து கைத்தறியைப் போல் மெஷினில் நெய்து அவைகளை சுலபமாக விற்க முன்வருவதனால் அங்கு நமக்கு மார்க்கெட் குறைகிறது.